பக்கங்கள் 17

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 18 திங்கட்கிழமை 04.09.2023 அதிர்வு 35

## கொள்ளுப்பிட்டியில் கரையொதுங்கிய ஆணின் சடலம்!

கொழும்பு, கொள்ளுப்பிட்டி கடற்கரை வீதியின் முன்பாக உள்ள கடற்கரையில் இன்று பகல் அடையாளம் 04


# ராஜபக்ஷக்களுக்கு விசுவாசமான அதிகாரிகள் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்கு உடந்தை

## ‘சனல் - 4’ நேர்காணலில் உண்மை அம்பலம்

இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினக் குண்டு வெடிப்புக்கு ராஜபக்ஷ குடும்பத்துக்கு விசுவாசமான இலங்கை அதிகாரிகள் உடந்தையாக இருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இங்கிலாந்தின் சனல் - 4 இல் நாளை (05) ஒளிபரப்பப்படவுள்ள நேர்காணல் ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது எனச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ராஜபக்ஷக்களை 04



# தமிழர் தலைநகரில் பேரினவாதம் சண்டித்தனம் காட்ட இடமளியோம்



## தமிழ் அரசின் பெருந்தலைவர் சம்பந்தன் திட்டவட்ட அறிவிப்பு

“தமிழர் தலைநகரான திருகோணமலையில் கண்ட கண்ட இடங்களில் பௌத்த விகாரைகளை நிறுவவும் - மேலும் சட்டவிரோதச் சிங்களக் குடியேற்றங்களை அமைக்கவும் பேரினவாதம் முயற்சிக்கின்றது. அவர்களின் இந்தச் சண்டித்தனத்துக்கு நாம் ஒருபோதும் இடமளியோம்.” 04

## லிட்ரோ எரிவாயு விலை அதிகரிப்பு

இலங்கையில் இன்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் 04

## பரபரப்புக்கு மத்தியில் நாளை கூடுகின்றது நாடாளுமன்றம்!


### 8ஆம் திகதி கெஹலியவுக்குப் பலப்பரீட்சை

நாடாளுமன்றம் நாளை முற்பகல் 9.30 மணிக்குச் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடவுள்ளது.

செப்டெம்பர் 05ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 5.00 மணி வரை ஆயுள்வேதம் (திருத்தச்) சட்டமூலத்தின் 04

## தமிழக மீனவர் மீதான தாக்குதல்: இலங்கை அரசின் கவனத்துக்கு!

### இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவிப்பு



தமிழக மீனவர்கள் அண்மையில் தாக்கப்பட்டமை தொடர்பில் இலங்கை அரசின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட் டுள்ளது என இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழக மாநிலத் தலைவர் 04

## சு.க. மீண்டும் ஆட்சிப்பீடம் ஏறும்!

### கட்சியை எவரும் பிளவுபடுத்தவே முடியாது என்று தேசிய மாநாட்டில் மைத்திரி சூளுரை



“ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் ஆட்சிப்பீடம் ஏறும். எமது கட்சிக்குள் எந்தக் குழப்பமும் இல்லை. கட்சியை எவரும் பிளவுபடுத்த முடியாது.”

- இவ்வாறு சூளுரைத்தார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன. 04

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# மருத்துவ தாதியின் தவறினால் சிறுமியின் கை அகற்றப்பட்டது

## யாழ். ஆஸ்பத்திரியில் சம்பவம்

மருத்துவ தாதியின் செயற்பாடு காரணமாக 08 வயது சிறுமியின் இடது கை, மணிக்கட்டின் கீழ் அகற்றப் பட்டுள்ள நிலையில் சிறுமி தொடர்ந்தும் வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

யாழ்.போதனா வைத்திய சாலையில் நடைபெற்ற இந்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது:-

யாழ்ப்பாணம் மல்லாகம் பகுதியை சேர்ந்த யாழ், இந்து ஆரம்ப பாடசாலையில் தரம் 03 கல்வி கற்கும் 08 வயது சிறுமி காய்ச்சல் காரணமாக கடந்த 25ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலை நோயாளர் விடுதியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

சிகிச்சையின் போது மறுநாள் 26ஆம் திகதி , சிறுமியின் கையில் 'கனுலா'(குளுக்கோஸ் , மருந்துகள் ஏற்றுவதற்காக மணிக்கட்டின் கீழ் பொருத்தப்படும் ஊசி) பொருத்தப் பட்டு , நோய் எதிர்ப்பு மருந்து (அன்டி பயோடிக்) ஏற்றப்பட்டுள்ளது.

'கனுலா' உரிய வகையில் சிறுமியின் கையில் பொருத்தாததால் , சிறுமிக்கு வலி ஏற்பட்டுள்ளது. அது தொடர்பில் சிறுமி கூறிய போதிலும் தாதியர்கள் , ஊசி ஏற்றினால் வலிக்கும் என கூறி அது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை.

அந்நிலையில் சிறுமியின் இரத்த நாளங்களில் பாதிப்பு ஏற்பட்டு, கையின் மணி கட்டின் கீழ் செயலிழந்துள்ளது. அதனால் சிறுமியின் கையை மணிக்கட்டுடன் அகற்ற வேண்டிய தேவை ஏற்பட்டதை அடுத்து, சிறுமியின் கை தற்போது அகற்றப்பட்டுள்ளது.

### பணிப்பாளர் மன வருத்தம்

இது தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பளார் த. சத்தியமூர்த்தி தெரிவிக்கையில் –

சிறுமியின்கைஅகற்றப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் உடனடி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த சம்பவத்தால் நான் மிக மனம் வருந்துகிறேன். இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாதவாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் சுகாதார அமைச்சுக்கு தொலைபேசி ஊடாகவும், எழுத்து மூலமாகவும் அறிவித்துள்ளேன். சுகாதார அமைச்சும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளது என்றார்.

### விசாரணை குழுக்கள் அமைப்பு

சம்பவம் தொடர்பில் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸின் உத்தரவின் கீழ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விசாரணைகளின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என ஆளுநர் அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

அதேவேளை யாழ்.போதனா வைத்தியசாலையில் இரு வைத்தியர்கள் தலைமையில் விசாரணை குழு அமைக்கப்பட்டு , விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

### பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

தமது பிள்ளையின் கை அகற்றப்பட்டமை தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுத்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என சிறுமியின் பெற்றோரால் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸாரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# படகில் இந்தியா சென்று பேச்சில் ஈடுபட வடக்கு மீனவர்கள் முஸ்தீபு




இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறலைக் கண்டித்து இந்தியாவுக்குப் படகு மூலம் சென்று பேச்சுகளில் ஈடுபடப்போகின்றார்கள் என யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தினர் அறிவித்தனர்.

இந்தியாவின் தமிழகத்துக்கு 14 பேர் கொண்ட வடபகுதி மீனவர்கள் கடல் வழியாக படகு மூலம் சென்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், தமிழக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி, தமிழக ஆளுநர் ரவி, தமிழக பா.ஜ.க. தலைவர் கு.அண்ணாமலை ஆகியோரைச் சந்தித்து பேச தீர்மானித்துள்ளனர்.

யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தில் இன்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த சம்மேளனத்தின் தலைவர் புனித பிரகாஸ், கடந்த முதலாம் திகதி இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறலைக் கண்டித்து ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரிடம் மகஜரொன்றைக் கையளித்தோம். இந்த மகஜர் கையளித்து 14 நாள்களுக்குள் இந்தியக் கடற்றொழிலாளர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாவிடில் காத்திரமான நடவடிக்கை எடுப்போம் என தெரிவித்த நிலையிலேயே இந்த முடிவைத் தாங்கள் எட்டினர் எனத் தெரிவித்தார்.

14 நாள்களுக்குள் தீர்வு காணப்படாவிடில் அடுத்து வரும் நாள்களில் இந்தப் பேச்சை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

# முகமாலையில் தாக்கப்பட்டவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

கடந்த ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதி பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முகமாலை பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் ஆணொருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.45 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த யதீஸ்குமார் (வயது 28) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் குறித்து இரு சந்தே கபர்கள் பளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் முகமாலை பகுதியையும் மற்றையவர் யாழ்ப்பாணம் – அரியாலை பகுதியையும் சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது ஒரு கொலை என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகபர்களை இன்றையதினம் நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை அவர்களை இந்த மாதம் 13ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# காதலியுடன் விடுதிக்குச் சென்ற இரு பிள்ளைகளின் தந்தை சாவு

தனியார் விடுதியொன்றில் காதலியுடன் தங்கியிருந்த இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

தலாவ பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளவராவர்.

அந்த நபர் தனது கள்ளக்காதலியுடன் விடுதிக்கு வந்துள்ளார் என்று ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

நேற்று மதியம் ஒரு மணியளவில் அவர் விடுதியில் திடீரென விழுந்திருந்த நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தார்.

பிரேத பரிசோதனை அறிக்கையின் படி திடீர் மாரடைப்பு ஏற்பட்டதால் மரணம் சம்பவித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய மாநாடு ஒத்திவைப்பு

## சீரற்ற காலநிலை காரணமாம்

ஐக்கிய தேசிய கட்சி சம்மேளனத்தை திகதி குறிப்பிடாது ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டதாக கட்சியின் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் –

ஐக்கிய தேசிய கட்சியின் 56ஆவது கட்சி சம்மேளனத்தை எதிர்வரும் 10ஆம் திகதி நடத்துவதற்கு சகல ஏற்பாடுகளும் இடம்பெற்று முடிந்துள்ள நிலையில், நாட்டின் தற்போதைய சீரற்ற காலநிலை காரணமாக கட்சிச் சம்மேளனத்தைத் திகதி குறிப்பிடாமல் பிற்போடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கட்சி முகாமைத்துவ குழு கலந்துரையாடியே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.



கட்சியின் முகாமைத்துவ குழு ஓரிரு தினங்களில் கூட இருக்கிறது. இதன் போது கட்சி சம்மேளனத்தை கூட்டுவதற்கான புதிய திகதி தீர்மானிக்கப்படும்.

பெரும்பாலும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் அல்லது அதற்கு அண்மித்த காலத்துக்குள் நடத்த நடவடிக்கை எடுக்க இருக்கிறோம்.

கட்சி சம்மேளனம் ஒத்திவைக்கப்பட்டமை தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

என்றாலும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலையால் தூரப்பிரதேசங்களில் இருந்துவரும் கட்சி ஆதரவாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிடுவதுடன் சம்மேளனத்தை சிறப்பாக நடத்தி முடிக்க முடியாத நிலை ஏற்படும் என்ற விடயங்களை கருத்திற்கொண்டே பிற்போடத் தீர்மானித்தோம்.

என்றாலும் கட்சி சம்மேளனத்தில் கலந்துகொள்ள மிகவும் ஆர்வமாக இருந்த ஆதரவாளர்கள், இதன் மூலம் அவர்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்துக்காக எமது கவலையை தெரிவித்துக் கொள்கிறோம். – என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

## கொள்ளுப்பிட்டியில்...

தெரியாத ஆணொருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது.

சடலம் தொடர்பான விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## சு.க. மீண்டும்...

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 72 ஆவது தேசிய மாநாடு கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று மாலை கொழும்பில் நடைபெற்றது. இதன்போது உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கட்சியின் 72 ஆவது மாநாட்டால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிளவுபடும் எனவும், கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர குறித்த மாநாட்டில் பங்கேற்கமாட்டார் எனவும் பரவலாக எதிர்பார்க்கப்பட்ட நிலையில், கட்சியின் சர்ச்சைக்குரிய உறுப்பினர்கள் அனைவரும் நேற்று ஒரே மேடையில் காட்சியளித்தனர்.

அத்துடன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை எந்த கொம்பனாலும் அழிக்க முடியாது எனவும் அவர்கள் சூளுரைத்தனர்.

இந்த மாநாட்டைக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகரவின் தொகுதியான குருநாகலையில் நடத்துவதற்கு முன்னதாக திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும், ஆளுங்கட்சி பக்கம் அமைச்சுப் பதவிகளை பெற்றுள்ள சுதந்திரக் கட்சி உறுப்பினர்களின் கோரிக்கையின் பிரகாரம் கொழும்பில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இதனால் தயாசிறி ஜயசேகரவும், அவர்களின் சகாக்களும் மாநாட்டில் பங்கேற்கமாட்டார்கள் எனவும் கூறப்பட்டது. தயாசிறி ஜயசேகரவின் பொதுச்செயலாளர் பதவிகூட பறிக்கப்படலாம் என எதிர்பார்க் கப்பட்டது.

ஆனால் அமைச்சர்களாக உள்ள சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர்களான நிமல் சிறிபாலடி சில்வா, மஹிந்த அமரவீர மற்றும் இராஜாங்க அமைச்சுப் பதவிகளைப் பெற்றுள்ள லசந்த அழகியவண்ண உள்ளிட்டவர்களும் பங்கேற்றனர்.

மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தாலும் சந்திரிகா அம்மையார் பங்கேற்கவில்லை. அவரின் வாழ்த்துச் செய்தி வாசிக்கப்பட்டது.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன, அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச உட்பட ஏனைய கட்சிகளின் பிரதிநிதிகளும் மாநாட்டில் பங்கேற்றிருந்தனர்.

## பரபரப்புக்கு...

இரண்டாவது மதிப்பீடு விவாதம் நடைபெறவுள்ளது.

அதன் பின்னர் தனிநபர் சட்டமூலங்களான ஸ்ரீ பாலபிவூர்த்தி வர்தன சமிதிய (கூட்டிணைத்தல்) சட்டமூலம், சமாதி சமூக அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் என்பன தொடர்பான இரண்டாவது மதிப்பீடு இடம்பெறும். இதனைத் தொடர்ந்து பி.ப. 5.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை அரசாங்கத்தினால் கொண்டுவரப்படும் ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை விவாதிக்கப்படவுள்ளது.செப்டெம்பர் 06ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10.30 மணிக்கு அந்நியச் செலாவணிச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2338/40 ஆம் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2341/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதி என்பன விவாதம் இன்றி அங்கீகரிக்கப்படவுள்ளன.

அதனைத் தொடர்ந்து பி.ப. 5.30 மணி வரை சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு அமைய விவாதம் இடம்பெறவுள்ளது.

செப்டெம்பர் 07ஆம் திகதி வியாழக்கிழமை மற்றும் 08ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய இரண்டு தினங்களும் மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை இந்த விவாதத்தைத் தொடர்வதற்கும் தீர்மானிக்கப்பட்டதுடன், 08ஆம் திகதி 5.30 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

## ராஜபக்ஷக்களுக்கு

மீண்டும் அதிகாரத்தில் அமர்த்துவதற்காக இராணுவ உளவுத்துறை அதிகா ரியான சுரேஷ் சாலி மற்றும் இஸ்லாமிய அரசுடன் இணைந்த நபர்களுடன் ஒரு சதித்திட்டம் தீட்டுவதற்காக 2018 இல் ஒரு சந்திப்பு இடம்பெற்றது எனவும் அந்த நேர்காணலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இந்தச் சந்திப்பு இடம்பெற்றதுடன் சுரேஷ் சாலி என்னிடம் வந்து ராஜபக்ஷக்களுக்குத் தேவை இலங்கையில் பாதுகாப்பற்ற சூழல். அப்போதுதான் கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாவதற்கு ஒரே வழி" - எனக் கூறியதாக ஹன்சீர் ஆசாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

"தாக்குதல் திட்டம் என்பது ஓரிரு நாள்களில் செய்யப்பட்ட திட்டம் அல்ல. அது இரண்டு, மூன்று ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெற்று ஆறு மாதங்களுக்குப் பின்னர் பாதுகாப்பை மீட்டெடுப்பதாக வாக்குறுதி அளித்ததன் பேரில் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியைப் பிடித்தபோது சுரேஷ் சாலி இராணுவப் புலனாய்வுத் தலைவராக பதவி உயர்வு பெற்றார்" - என்றும் ஆசாத் மௌலானா மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழர்

- இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

"வடக்கு - கிழக்கு தமிழர்களின் தாயகம். எமது தாயகத்தின் தலைநகர் திருகோணமலை. இங்கு தமிழர்களை ஒதுக்க அல்லது இல்லாதொழிக்கச் சிங்கள - பௌத்த அடிப்படைவாதிகள் பெரிய நிகழ்ச்சித் திட்டத்தை த் தயாரித்து வருகின்றனர். அவர்களின் எண்ணம் ஒருபோதும் நிறைவேறாது.

தமிழர்கள் பெருமளவில் வாழும் இடங்களில் பௌத்த விகாரைகள் எதற்கு? சட்டவிரோதச் சிங்களக் குடியேற்றங்கள் எதற்கு? இந்த அடாவடிச் செயற்பாடுகளை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளேன்." - என்றார்.

## தமிழக...

குப்புசாமி அண்ணா மலைக்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் அனுப்பிவைத்துள்ள பதில் கடிதத்தில் இந்த விடயம் குறிப்பிடப் பட்டுள்ளது.

இந்தியக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 4 இந்திய மீனவர்கள் மீது கடந்த மாதம் 22 ஆம் திகதி இலங்கை கடல் கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தினர் என தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

ஆர்காட்டுத்துறையில் இருந்து தென் கிழக்கில் 22 கடல் மைல் தொலைவில் மீன் பிடித்துக்கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீதான இந்தத் தாக்குதலின் போது 5 லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்

களும் சேதமடைந்தன என்று அந்தச் செய்திகளில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக தாம் அனுப்பியிருந்த கடிதத்துக்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் அனுப்பியுள்ள பதில் கடிதத்தை பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவர் குப்புசாமி அண்ணாமலை சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

ஓகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி தமிழக மீனவர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தை இலங்கைக்கான இந்தியத் தூதரகம் உடனடியாக இலங்கை அரசின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளது என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதன்போது சம்பவம் தொடர்பில் ஆழ்ந்த கவலையையும் இந்தியத் தூதரகம் தெரிவித்துக்கொண்டது எனவும் அவர் கூறியுள்ளார். மீனவர்களுக்கு எதிராக தாக்குதல் களை மேற்கொள்வதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதையும் இந்திய வெளியு றவுத்துறை அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துமாறும் தகவல்களை வழங்குமாறும் இலங்கை அரசிடம் இந்தியத் தூதரகம் கோரியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கின்றோம் எனவும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சரின் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## லிட்ரோ எரிவாயு...

வைத்து லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் இந்த விடயத்தை அறிவித்தார்.

இதற்கமைய, 12.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை 145 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி, அதன் புதிய விலை மூவாயிரத்து 127ரூபாவாகும்.

அதேநேரம், 5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு 58 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு புதிய விலை ஆயிரத்து 256 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 2.3 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை 26 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள் ளது. இதற்கமைய அதன் புதிய விலை 587 ரூபாவாகும்.









# தற்கொலைக்கு எதிரான விழிப்புணர்வு சைக்கிளோட்டம்

தற்கொலைகளை தடுக்கும் வகையில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட தொடர் சைக்கிளோட்டம், திருகோணமலையை ஞாயிற்றுக்கிழமை (03) வந்தடைந்தது.

இந்தத் தொடர் சைக்கிளோட்ட வீரர்களை திருகோணமலை றோட்டரிக் கழக அங்கத்தவர்கள் வரவேற்றனர். தைரியம், இரக்கம், பொறுப்பேற்றல் என்ற பெயரையுடைய, தன்னார்வ தொண்டர் நிறுவனம், றோட்டரிக்கழக அனுசரணையுடன் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

இலங்கையில் நாளொன்றுக்கு தற்கொலை செய்பவர்களின் எண்ணிக்கை 11 பேர் ஆக உள்ளது.

தற்கொலை முயற்சிகளை தடுப்பதுடன், மக்களின் உளவள நலனை மேம்படுத்தவும் தற்கொலை எண்ணத்துக்கு தூண்டப்படுபவர்களுக்கு உளவள ஆலோசனைகளை வழங்கி, அதிலிருந்து விடுவிப்பதற்கான வழி வகையை ஏற்படுத்தும் நோக்கில் இந்த விழிப்புணர்வூட்டல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சிசிசி 1333 என்னும் இலவச ஆலோசனை வழங்கும் தொலைபேசி இலக்கத்தை பொது மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்துவதை நோக்காக கொண்டு, இலங்கையின் 12 மாவட்டங்களை உள்ளடக்கியதாக தொடர் சைக்கிள் ஓட்ட நிகழ்வை நடத்தி வருகின்றனர்.

இந்தத் தொடர் சைக்கிளோட்டமானது திருகோணமலையை வந்தடைந்ததன் பின்னர் நகரின் பிரதான கடற்கரையில் தற்கொலையின் தாக்கம் குறித்து மக்களை விழிப்பூட்டும் முகமாக நிகழ்ச்சி ஒன்றும் மாலை 5 மணிக்கு கடற்கரையில் நடத்தப்பட்டது.

அத்துடன் தற்கொலை மனப்பாங்கை நீக்கக் கூடிய ஆலோசனைகள் 1333 என்ற தொலைபேசி இலக்கம் அடங்கிய கையேடுகளும் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஆசை யாரைத்தான் விட்டது?

ஆசை யாரைத்தான் விட்டது? மைத்திரிபால சிறிசேன மட்டும் அதற்கு விதிவிலக்கா என்ன? ஆனால் அவர் நப்பாசைப்படுவதுதான் கேவலம்.

ஏறிய ஏணியை எட்டி உதைத்தவருக்கு மீண்டும் ஓர் ஏணி வழங்க யாரும் முன் வரார். அது தெரியாமல் நப்பாசைப்படுகின்றார் மைத்திரியார்.

மீண்டும் பெறுவதற்கு அவர் துடிக்கும் ஜனாதிபதிப் பதவியின் மகாத்மியம் அத்தகையது. ஒரு தடவை சுவைத்தால் விடாது அந்த அதிகார ருசி. அந்த ருசியைத் தேடிய பசியில் இப்போது பிதற்றுகின்றார் அவர்.

திரும்பவும் தன்னைப் பொது வேட்பாளராகக் களம் இறக்குவார்கள், அதன் மூலம் ஜனாதிபதிப் பதவியை பெறுவதற்குத் தமக்கு வாய்ப்பு இருப்பதாக அவர் கனவு காண்கின்றார்.

எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் - 2015 தேர்தலில் - அவருக்குக் கிட்டியது அதிர்ஷ்டம் என்பதிலும் பார்க்க, அவரது 'சுயரூபம்' தெரியாமல் மற்றைய தலைவர்கள் அவருக்குப் பொது வேட்பாளர் நியமனத்தைத் தர இணங்கியமையால் கிட்டிய பேறு அது என்பது அவருக்கு இன்னும் புரியவில்லைப் போலும்.

நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவியை இல்லாது ஒழித்து, புதிய நாட்டைக் கட்டி எழுப்புவதற்கான இடைத்தரகராகத்தான் மைத்திரிபால சிறிசேனவை அப்போதைய எதிர்க்கட்சிகள் பொது வேட்பாளராக முன்னிறுத்தின.

தாம் போட்டியிட வேண்டிய வேட்பாளர் நிலையை அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிக்கு விட்டுக் கொடுத்தபோது அதை மிகப் பவ்வியமாகத்தான் பெற்றுக் கொண்டார் மைத்திரியார்.

ஆரம்பத்தில் மற்றொரு பதவிக் காலத்துக்குத் தான் ஆசைப்படப் போவதில்லை என்றுதான் மைத்திரியார் திரும்பத் திரும்பத் திருவாய் மலர்ந்தருளி வந்தார். தேர்தலில் மக்களுக்கு வாக்குறுதி அளித்தமைப் போல அந்த ஒரு பதவிக்காலத்துடனேயே தான் பதவியில் இருந்து அகன்று விடுவார் என்றும் மீளவும் மீளவும் கூறியும் வந்தார்.

பதவிக்கு வந்த ஆரம்பத்தில் தமது ஆறு வருடப் பதவி காலத்தை ஐந்து வருடங்களாகக் குறைக்கும் அரசமைப்பு மாற்றத்துக்குக் கூட இணங்கித் தமது முழுச் சம்மதத்தையும் தந்தார்.

ஆனால், பதவிக் காலத்தில் ஓரிரு வருடங்கள் தாண்டியதும், பதவி ருசி அவரைப் பற்றிக் கொண்டது. அந்தப் பதவியை வைத்து சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியையும் வல்வந்தமாகப் பிடுங்கி எடுத்தார். தாம் ஆரம்பத்தில் விட்டுக்கொடுத்த ஒரு வருடப் பதவிக் காலத்தை மீண்டும் பெற்று விடத் துடித்தார். அதற்காக உயர்நீதிமன்றத்தை நாடினார். ஆனால் அவரது முயற்சி பலிக்கவில்லை.

அதனால் மீண்டும் பழைய தரப்புகளுடனும், அல்லது புதிய தரப்புகளைச் சேர்த்துக் கொண்டும், தேர்தலில் குதித்து, ஜனாதிபதிப் பதவியில் தொடர அப்போதும் நப்பாசைப்பட்டார். ஆனால் பதவிக்கு வந்ததும், தன்னைப் பதவிக்குத் தூக்கி விட்ட தரப்புகளை எட்டி உதைத்து, அதிகாரத் திமிரில் ஆட்டம் காட்டிய அவரை யாரும் பின்னர் நம்பிச் சேர்க்கவில்லை. அல்லது அவருடன் சேரவில்லை. ஜனாதிபதிப் பதவியை வைத்து, அவர் வல்வந்தமாகக் கைப்பற்றிய சுதந்திரக் கட்சியைக் கைவிட்டு, அக்கட்சியில் இருந்த பெரிய தலைகள் எல்லாம் கூட ஓட்டம் பிடித்தன - அவரை நட்டாற்றில் தனிமையில் விட்டு விட்டு.

அத்தகைய பிரகிருதி மீண்டும் பொது வேட்பாளர், ஜனாதிபதிப் பதவி என்று நப்பாசையோடு வீணீர் வழியப் பேசுகின்றார். ஆசை யாரைத்தான் விட்டது?







# மின்னொளியில் 9 ஆவது வெற்றி: சுப்பர் ஓவரில் சோபர் அணி சம்பியன்!

(கே. எ. ஹமீட்)

சிற்றிசன் மீடியா நெற்வேக் ஏற்பாட்டில் மின்னொளி மூலமாக கிரிக்கெட் சுற்றுப் போட்டி நிந்தவூர் பொது விளையாட்டு மைதானத்தில் சுமார் ஏழு நாள்கள் நடைபெற்றது.

சுமார் 56 கழகங்கள் பங்கு பற்றிய இந்த சுற்று போட்டியில் இறுதியாக அட்டாளைச்சேனை சோபர் கழகமும் அக்கரைப்பற்று ஹய்ரா விளையாட்டு கழகமும் இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டன.

அந்த அடிப்படையில் இறுதிப் போட்டியில் சுப்பர் ஓவர் மூலமாக சோபர் அணியினர் ஒன்பதாவது தடவை மின்னொளி மூலமாக நடைபெறுகின்ற சுற்று போட்டியில் சாம்பியனாக திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் பருவ காலத்தில் தொடர்ச்சியாக இது ஒன்பதாவது வெற்றிக் கிண்ணம் என்பது விசேட அம்சமாகும்.

இந்தச் சுற்று போட்டியில் இறுதிப் போட்டியின் ஆட்டநாயனாக ஜெசிலாசிரியரும் அரை இறுதி போட்டியின் ஆட்டநாயனாக ஜெசிலும் தெரிவு செய்யப்பட்டனர்.

# கைத்தொழில் முயற்சியாளர் கலந்துரையாடல்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

வடக்குக்கான கைத்தொழில் துறைக்கான மன்றம் ஒழுங்கு செய்திருந்த கைத்தொழில் முயற்சியாளர்களுடான கலந்துரையாடல் ஒன்று யாழ். கலாசார மண்டபக் கண்காட்சி கூடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (04) இடம்பெற்றது.

கைத்தொழில் துறைக்கான மன்றத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி வீ.கே.பிரேமாநந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சுங்கத் திணைக்கள ஓய்வு பெற்ற அதிகாரி ரவீந்திரன் வளவாளராக கலந்து கொண்டு கைத்தொழில் முயற்சியாளர்கள் எதிர்நோக்கும் சவால்களுக்கு எவ்வாறு முகம் கொடுப்பது சம்பந்தமாக விரிவான விளக்கத்தை வழங்கினார்.

இந்த நிகழ்வில் இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து கண்காட்சிக்காக வருகை தந்திருந்த கைத்தொழில் முயற்சியாளர்கள், புதிதாக கைத்தொழில் முயற்சியில் ஈடுபட இருப்பவர்கள் மற்றும் கைத்தொழில் துறைக் கான மன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.











# கல்முனையில் பொலிஸ் தின நிகழ்வு

**(பாறுக் ஷிஹான்)**

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 157 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வை முன்னிட்டு பல சமூக நலப்பணிகளும் சமய நிகழ்வுகளும் நாடு முழுவதிலும் இடம்பெற்று வருகின்றன.

கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய ஏற்பாட்டில் துஆ பிரார்த்தனை மாலை கல்முனை முகையதீன் ஜும்மா பள்ளிவாசலில் நடைபெற்றது.

முதலில் அதிதிகள் பாராம்பரிய பொல் அடியுடன் வரவேற்கப்பட்டு பள்ளிவாசல் வளாகத்தில் தென்னை மரநடுகை இடம்பெற்றது.

பின்னர் கிராஅத் ஓதலுடன் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டு வரவேற்பு உரையை கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் மேற்கொண்டார். கல்முனை முகையதீன் ஜும்மா பள்ளிவாசல் தலைவர் வைத்தியர் எஸ்.எம்.ஏ அஸீஸ் பொலிஸ் தினத்தின் முக்கியத்தும் குறித்து உரையாற்றினார்.

விசேட உரையை கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய சமூக பொலிஸ் பிரிவின் ஆலோசனை குழுப் பொதுச் செயலாளரும் காணி மத்தியஸ்த சபை பிரதான மத்தியஸ்தருமான எம்.ஐ.எம் ஜிப்ரி, பிரதம அதிதி உரையை அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எச்.ஏ.என்.கே. தயமந்த விஜயசிறி ஆகியோர் நிகழ்த்தினர்.

விசேட துஆ பிரார்த்தனையை கல்முனைகுடி பேஷ் இமாம் முகைதீன் ஜும்மா பள்ளிவாசல் மௌலவி ஏ.எல். நாஸர் முன்னெடுத்தார்.

நிகழ்வில் விருந்தினர்கள் பொன்னாடைகள்போர்த்திக்கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக, அம்பாறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அசார, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், விசேட அதிரடிப்படை, கடற்படை அதிகாரிகள், சமூக பொலிஸ் குழு உறுப்பினர்கள், கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய சமூக பொலிஸ் பிரிவு ஆலோசனை குழுவின் உறுப்பினர்கள் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# வீட்டுத் திட்ட உரிமையாளர்களுக்கு காணி உறுதி அம்பாறையில் வழங்கல்





(கே. எ. ஹமீட் )

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டுவரும் 'உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம்' எனும் திட்டத்தின் கீழ் வீட்டுக் கடன் வழங்கும் நிகழ்வும், கடந்த கால வீட்டுத்திட்ட உரிமையாளர்களுக்கான காணி உறுதிப்பத்திரம் வழங்கலும் நேற்று முன்தினம் அம்பாறை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக்க அபேவிக்ரம தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கலந்து கொண்டார்.

கௌரவ அதிதிகளாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே, அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான டபிள்யூ. வீரசிங்க, ஏ.எல்.எம்.அதாஉல்லா, சட்டத்தரணி எஸ்.எம்.எம். முசாரப் மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ஆர்.சூரியாராச்சி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கடந்த கால வீட்டுத் திட்டங்களுக்கான காணி உறுதிப் பத்திரங்கள் தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த 62 பேருக்கு வழங்கப்பட்டன. உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம் எனும் திட்டத்தின் கீழ் 110 பேருக்கு வீட்டுக்கடன் வசதிக்கான காசோலையும் வழங்கப்பட்டது.

இங்கு பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முசாரப் அவர்கள் உரையாற்றும்போது, இறக்காமம் அமீரலிபுர வீட்டுத்திட்டம் மற்றும் பொத்துவில் செங்காமம் அல் – மினா வீட்டுத்திட்டத்திலுள்ளவர்களுக்கான காணி உறுதிப்பத்திரங்கள் தசாப்தங்கள் கடந்தும் இன்னும் வழங்கப்படாமல் இருப்பதை சுட்டிக்காட்டியதுடன் அதற்கான முயற்சியில் நான் ஏற்கனவே ஈடுபட்டு வருகின்றேன். அக்கிராமத்திலுள்ள மக்கள் எதிர் நோக்கும் குடிநீர்ப்பிரச்சினை, யானைகளின் அட்டகாசம் போன்றவை தொடர்பிலும் உரையாற்றியதுடன் மிக விரைவாக இப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அம்பாறை மாவட்ட முகாமையாளர் திருமதி ஏ.பீ.ஜராங்கனி, கல்முனை நகர முகாமையாளர் ஜீ.கனகே, பொறியியல் உதவியாளர் ஏ.சி.ஏ.பாஹீம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# திணைக்களத் தலைவர்களால் மோசமாக நடத்தப்படும் கீழ் உழைப்புப் பட்டதாரிகள்!

## பாதிக்கப்பட்டவர்கள் பல்வேறு தரப்பினருக்கும் கடிதம்

(த.சுபேசன்)

வடக்கு மாகாணத்தில் உள்ள அரச திணைக்களங்கள் சிலவற்றில் கீழ் உழைப்பு பட்டதாரி நிலையிலுள்ள உத்தியோகத்தர்களை திணைக்களத் தலைவர்கள் மிக மோசமாக நடத்துகின்றனர் என்று தெரிவித்து கீழ் உழைப்புப் பட்டதாரிகள் வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர், மாகாண ஆளுநர், உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் வடமாகாண பட்டதாரிகள் அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றுக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

கீழ் உழைப்புப் பட்டதாரி வகையினுள் உள்ளடக்கப்பட்டிருக்கும் (PL1, PL2, PL3 சம்பள அளவுத்திட்டம்) உடைய பதவியை உடைய பட்டதாரிகளுக்கு சேவை உள்ளடங்களாக அவர்களது பதவியை மாற்றம் செய்தல் அவசியமான ஒன்றாகக் காணப்படுகிறது.

கீழ் உழைப்புப் பட்டதாரி வகையினுள் வடக்கு மாகாணத்தில் பலர் பணி புரிந்து வருகிறோம்.காலத்துக்குக் காலம் இது தொடர்பாக அமைச்சர்கள், ஆளுநர், பிரதிப் பிரதம செயலாளர் மற்றும் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு ஆகியோருக்கு தெரியப்படுத்தியும் இதுவரை ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறவில்லை.

கடந்த 2021 ஆம் ஆண்டு 54,000 பட்டதாரிகளுக்கு அரச நியமனம் வழங்கப்பட்டது.அதன்போது வேறு அரச திணைக்களங்களில் பணியாற்றவில்லை என்ற கிராம அலுவலரின் உறுதிப்படுத்தல் கடிதம் கேட்கப்பட்டது. அத்துடன் திணைக்களங்களில் கடமையாற்றியிருந்தால் பணி விலகியமைக்கான கடிதம் ஆகியன கேட்கப்பட்டன. இதனால் ஏற்கனவே திணைக்களங்களில் பணி புரியும் பட்டதாரிகளான எம்மால் பட்டதாரி நியமனத்துக்கு விண்ணப்பிக்க முடியவில்லை.

அதன் பின்னர் இது தொடர்பாக உள்ளூராட்சி அமைச்சிடம் கீழ் உழைப்புப் பட்டதாரி உத்தியோகத்தர்கள் விடுத்த கோரிக்கையின் பயனாக ஆரம்ப மட்டங்களில் சேவையாற்றிய உள்வாரி பட்டதாரிகளுக்கு பட்டதாரி நியமனம் வழங்கப்பட்ட போதிலும் அதில் வெளிவாரி அடிப்படையிலான பட்டதாரி கீழ் உழைப்பு உத்தியோகத்தர்கள் புறக்கணிக்கப்பட்டோம். கீழ் உழைப்புப் பட்டதாரிகள் வகுதிக் குள் உள்ள நாம் பல்வேறு மன உளைச் சல்களுக்கும் ஆளாகின்றோம். சில திணைக்களங்களில் சுகாதார தொழிலா ளர்கள் செய்ய வேண்டிய வேலைகளைக் கூட நாம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் நிலவுகிறது.

திணைக்கள அதிகாரிகளின் அவதூறு பேச்சுக்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இது பட்டதாரிகள் தொடர்பான விடயத்துக்கே இழுக்கை ஏற்படுத்துகின்றது.

இவ்வாறான செயற்பாடுகள் கீழ் உழைப்பு நிலையில் கடமை புரியும் பட்டதாரி உத்தியோகத்தர்களான எம்மை தற்கொலைக்குத் தூண்டுவதாக அமைகின்றது. இந்த விபரீதத்தைத் தவிர்க்கும் முகமாக எமக்கான ஓர் நியாயமான பதவி மாற்றத்தை விரைவில் ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.– என்றுள்ளது.




# கிழக்கு கல்விப் பணிப்பாளருக்குக் கௌரவம்

(நூருல் ஹுதா உமர் )

கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட மட்ட ஆங்கில மொழி மற்றும் நாடகப் போட்டி கல்முனை கல்வி வலய கல்முனை கர்மேல் பத்திமா கல்லூரியில் கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் தலைமையில் நேற்று (03) நடைபெற்றது.

திருக்கோவில், சம்மாந்துறை, கல்முனை, அக்கரைப்பற்று ஆகிய நான்கு கல்வி வலயங்களை சேர்ந்த மாணவர்கள் இந்த மாவட்ட மட்ட போட்டிகளில் பங்குபற்றினர். மாவட்ட மட்ட போட்டிகளின் தொடக்க நிகழ்வை கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் அகிலா கனகசூரியம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வைபக ரீதியாக தொடங்கி வைத்தார்.

எதிர்வரும் 30 ஆம் திகதி கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம் ஓய்வு பெறுவதை முன்னிட்டு அவருக்கு கல்முனை கல்வி மாவட்டம் சார்பில் சிவப்பு கம்பள வரவேற்பு மரியாதை வழங்கப்பட்டது. நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன. பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.



# அதிபரின் சேவைக்கு பாராட்டுக் கூறிய மக்கள்

(அபு ஷைரீன்)

பாடசாலைச் சூழலை சுத்தமாக பேணிப் பாதுகாப்பதில் அதீத கரிசனை செலுத்தி தனது சொந்தச் செலவிலேயே சிரமதானப் பணிகளை நிறைவேற்றிய அதிபரின் சேவை பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

கல்முனை கல்வி வலயத்துக்கு உட்பட்ட சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்திலேயே இச்சம்பவம் நிறைவேறியுள்ளது.

இப்பாடசாலையின் ஆரம்ப பிரிவுப் பகுதியில் நீண்ட காலமாக புல் பற்றைகள் காடுகள் போன்று வளர்ந்திருந்தன. இது தொடர்பாக அதிபரான நஸ்லின் றிப்கா அன்ஸாரின் கவனததுக்குக் கொண்டு வந்ததையடுத்து அவர் உடனடியாக இதனை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொண்டார்.

தனது தனிப்பட்ட செலவில் கூலியாடள்களை அமர்த்தி இந்தப் பணியை நிறைவேற்றி மாணவர்களுக்கான சிறந்த சுற்றுச் சூழல் வசதியை ஏற்படுத்தியுள்ளார்.

தனது பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள் எவரையும் எவ்வித கஷ்டங்களுக்கும் உட்படுத்தாமல் தானே முன்னின்று இந்தப் பணியை நிறைவேற்றிய இப்பாடசாலை அதிபரின் தன்நம்பிக்கையையும், ஆளுமையையும், கடமை உணர்வையும் பலரும் பாராட்டி மெச்சுகின்றனர்.

# கைதிகளுக்குப் பயிற்றுவிப்பதற்கு யாழ். சிறைச் சாலையில் சலூன்





**(த.சுபேசன்)**

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் சிறைக் கைதிகளுக்கு பயிற்றுவிப்பதற்கான சலூன் (முடி வெட்டும் நிலையம்) ஒன்று சனிக்கிழமை (02) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வேலுப்பிள்ளை சிவனேஸ்வரன் என்பவரது நிதிப் பங்களிப்பில், யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஆனந்தராஜாவின் பங்கேற்புடன் சலூன் திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அட்டாளைச்சேனை அறபா வித்தியா மாணவர்களால் சிரமதானம்





**(பைசுல் றியாஸ்)**

அக்கரைப்பற்று கல்வி வலயத்துக்கு உட்பட்ட அட்டாளைச்சேனை அறபா வித்தியாலய மாணவர்களால் சிரமதானம் மூலம் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர் எம்.ஏ.அன்சார் தலைமையில் நடைபெற்ற இச் சிரமதான நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கோணாவத்தை இரும்பு பாலத்தடியில் நடைபெற்ற இந்தச் சிரமாதானத்தில் பாலத்தின் இருபக்கங்களிலும் காணப்பட்ட குப்பை, கூழங்கள் அகற்றப்பட்டுச் சுத்தம் செய்யப்பட்டது.




# இலட்சிய இளையோரை விழுங்குகின்றதா...?

## சமூக ஊடக போதை...!

ஒரு சமுதாயம் வளர அடிப்படைத் தேவையாக கருதப்படுவது தகவல் தொடர்பு ஆகும். ஊடகத்தின் அடுத்த பரிணாமம் தகவல் தொடர்பு சாதனம். தகவலை அனுப்புபவருக்கும், பெறுபவருக்குமிடையே நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துவதே தகவல் தொடர்பு சாதனம்.

தொலைக்காட்சி சினிமா வானொலி மாத-வாராந்த-நாள் இதழ்கள் இணையம் இவையனைத்தும் இளைய சமுதாயத்தின் உள்ளத்தில் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றன. இணைய வலைப்பின்னலின் கோடானகோடி நன்மைகளை மறுதலித்துவிட்டு அதன் தீமைகளை அரவணைத்துக் கொள்வதிலேயே இளைய சமூகம் ஆர்வம் காட்டுகிறது. பொதுவாக ஊடகம் தகவல் தொடர்பு சாதனம், மீடியா, வெகுஜன தொடர்பு சாதனம் என்று பல பெயர்களில் அழைக்கப்படுகின்றன.

ஊடகங்களில் மிக முக்கிய இடத்தை சமூக வளைத்தளங்கள் வகிக்கின்றது. Social Media (சமூக ஊடகம்) என்றால் என்ன என்பது குறித்து பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்பட்டாலும், அதை சுருக்கமாகவும் எளிமையாகவும் சொல்ல வேண்டும் என்றால், "உங்கள் கருத்துக்களை படைக்கவும், பகிரவும் Internet மூலம் இணைக்கப்பட்ட ஒரு தளம், அல்லது 'மேடை' என்று கூட சொல்லலாம்."

ஒரு நாட்டின் சக்தியும் உறுதியும் அந்த நாட்டின் எழுச்சிமிக்க இளைய தலைமுறையாகும். அநீதிகளுக்கெதிராய்த் துடித்தெழும் இரத்தத்தின் மறுபெயர்தான் இளமை. இனிமையும் கனவுகளும் கொண்ட இளமைப் பருவம் வாழ்க்கைப் புத்தகத்தின் வித்தியாசமான ஒரு பக்கம். இளமை சகலரும் விரும்பும் ஒரு பருவம் இளமையை அடைந்தோர் காணும் மகிழ்ச்சி போலவே இளமையை மீளப் பெற்றுக்கொள்ள விரும்பும் வயோதிபரும் இருக்கவே செய்கின்றனர். ஏன்! இழந்த இளமையை மீளப் பெறவென மருந்துகள் கூட சந்தைப் படுத்தப் படுகின்றன. அந்தளவு பெறுமதியும் எல்லோராலும் விரும்பப் படுவதுமான இளமை பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியதாகும். காலம் தவறிக் கவலைப் படுவதில் எப்பயனுமில்லை

சமூகத்தின் முதுகெலும்புகளான இளைஞர்களின் பாதுகாப்பும் மேலாண்மையுமே சமூகத்தைக் காக்கும் அரணகளாகும். அது எந்தத்துறையிலென்றாலும் சரியே அவர்களது சறுக்கல் சமூகத்துக்கு ஏன் உலகுக்கே பெரும் சுமையாக அமைந்து விடுகின்றது. எனவேதான் உலகமெல்லாம் இது விடயமாக கவனம் செலுத்தப் படுகிறது. நவீன சவால்கள் அவர்களைத் திசை திருப்பிவிட்டன. சமய சமூக கலாச்சார விழுமியங்கள் மறக்கடிக்கப்பட்ட நிலையில் பிறந்தோம் வாழ்கிறோம். பொழுதைக் கழிக்கிறோம் நேரத்தை வீணடித்து மகிழ்ச்சியில் மூழ்கியிருக்கிறோம் என்ற உணர்வோடே இளைஞர்கள் வளர்த்து விடப்படுகின்றனர்.

கொலை, கொள்ளை, பாலியல் குற்றங்கள், போதைப் பொருள் பாவனை முதலிய யாவற்றிலும் சிக்குண்டுள்ளவர்கள் பற்றிய மதிப்பீடுகள் மூலம் வாலிபர்களே அதிகமாக இருப்பதாகக் காண முடிகிறது. எனவே இளைஞர்கள் விடயமாகக் கவனம் செலுத்தப்படுவதும் ஆரோக்கியமாக நல்ல முயற்சிகளில் இறங்குவதுமே இன்று அவசரமும் அவசியமுமாகும்.

இளைஞர்கள் இன்று எதிர் நோக்கும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று தொடர்பூடகங்களாகும் குறிப்பாக சமூக வலைத்தளங்களாகும் . உலகத்தையே உள்ளங்கைக்குள் சுருட்டி வைக்கும் ஊடகங்களின் அபரிமிதமான வளர்ச்சி சிலபோது ஆக்கத்தை விட அழிவுக்கே துணைபோகும் அவலநிலையை அவ்வப்போது சமூக வலைத்தளங்களில் அவதானிக்க முடியும். மனித மனதிலுள்ள உணர்வுகளைத் தூண்டி அதில் குளிர்காயும் சமகால ஊடகக் கலாச்சாரம் இளைஞர்களின் இரத்தத்தில் ஊறிப் போயுள்ளது. அறிவையும் அன்பையும் மனிதப் பண்பாடுகளையும் வளர்க்க வேண்டிய ஊடகம் பொருளாதாரம் கலாசார சீரழிவு போன்றவற்றை பிரதான நோக்கங்களாகக் கொண்டு தீமைகளின் அடிவேராகத் திகழ்கின்றது.

இன்றைய உலகத்தில், இளைஞர்கள் தவறான பாதைக்குச் செல்ல பல வாய்ப்புகள் உள்ளன. ஆனாலும், தொழில்நுட்ப சாதனங்களின் அபார வளர்ச்சியால் அவர்களின் கைகளில் எளிதில் கிடைக்கக் கூடியது இணையம். அதன் மூலமாகவே அதிகளவில் தவறான பாதையை நாடுகின்றனர். உலகின் நல்லது, கெட்டது அனைத்தும் உள்ளங்கையில் அலைபேசி ரூபத்தில் உள்ளது. சமூக ஊடகங்கள் இன்றைய இளைஞர்களின் ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் நிச்சயமாகப் பாதிக்கின்றன. டிக்டாக், இன்ஸ்டாகிராம், முகநூல் போன்ற சமூக ஊடகங்கள் சமுதாயத்தைச் சீரழித்துவருகின்றன. சமூக ஊடகங்களை நல்லவிதமாகப் உபயோகித்து பயன்பெறும் இளைஞர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவர்களைக்கூட தவறான பாதைக்கு இட்டுச் செல்லும் ஏராளமான வாய்ப்புகள் சமூக ஊடகங்களில் உள்ளன.

இலட்சியப் பாதையில் பயணிக்க வேண்டிய இளைஞர்கள், வாழ வேண்டிய வயதில் வழி தவறிப் போய் 'சமூக ஊடகங்கள்' என்னும் புதைமணலில் சிக்கி, தங்கள் வாழ்க்கையை இழக்கின்றனரா? என்பது இன்றைய கேள்வி.

டிஜிட்டல் உலகம் என்ற புதியதோர் உலகத்தைப் பெற்ற நாம், அதன் நன்மைகளைப் பெற்றதோடு நிற்காமல், பக்க விளைவாக இளைய சமுதாயத்தைச் சீரழிக்கும் தீமைகளையும் பெற்று விட்டோம் என்பதே உண்மை! இணையம் உச்சாணிக் கொம்பில் நம்மை ஏற்றி விடுவதும் உண்டு. தரைமட்டத்துக்குத் தள்ளி விடுவதும் உண்டு. இன்று உலக அரங்கில் ஒரு மிகப்பெரிய ஆயுதம் சமூக ஊடகம். பாரம்பரிய ஆயுதத்தை விட மிஞ்சிய ஆயுதம்தான் சமூக ஊடகம் . இந்தச் சமூக ஊடகம் பாதகமாக மற்றும் சாதகமாகவும் பயன்படுத்தலாம். இன்று நடக்கும் நிகழ்வுகள் இதற்குச் சாட்சி .

சமூக ஊடகங்களில் நாம் நமது கருத்து சுதந்திரத்தை துணிச்சலோடு பதியலாம். நமக்கு தேவையான தகவல்கள் பெறமுடியவும் மற்றும் தற்போது பல தகவல்கள் உடனுக்குடன் பெறவும் முடியும். நல்ல பல கருத்துகள், நல்ல பல செய்திகள் , நல்ல பல தக

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இலட்சிய இளையோரை...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வல்கள் , நம் கொள்கை சார்ந்த விசயம் அதை உலக மையபடுத்துவதற்கும் , சமூகமயப்படுத்துவதற்கும் எல்லோரிடமும் பகிர்ந்து கொள்வதற்கும் மிகப்பெரிய கருவி சமூக ஊடகம். அதிகமான அனுகூலங்கள் உள்ளன .

ஒரு நாட்டின் ஆட்சியை கூட மாற்ற முடியும் என்பதை நிரூபித்த ஊடகம் சமூக ஊடகம். மற்றும் நம் தொழில் சார்ந்த விடயங்கள் நமக்கு தேவையான பொருள்கள் வாங்க விற்க என்று கூட இங்கு நாம் பயன்படுத்தி இந்த ஊடகத்தின் வாயிலாக நமது முன்னேற்றம் பெரிய அளவில் இல்லாவிட்டாலும் சிறிய அளவில் பெறலாம்.

இன்று மாணவர்கள், இளைஞர்கள் முதல் வயதானவர்கள் முதல் பயன்படுத்தும் Facebook, whatsapp, gmail, yahoo, hotmail, tweeter, skype போன்ற அனைத்தும் நமக்குக் கிடைத்த இலவச ஊடகமே என்பதை கவனத்தில் கொண்டு அவைகளை பயன்படுத்தி எமது சமூகதத்துக்குத் தேவையான செய்திகளை வழங்க முன்வர வேண்டும்.

நாம் உலகில் தலை நிமிர்ந்து வாழும் சிறந்த சமூகமாக உருவெடுக்க இந்த சமூக ஊடகத்தை வலுபடுத்துவோம் அதை நமது ஆக்குவோம். ஒவ்வொருவரும் இதை வாய்ப்பாகப் பயன்படுத்த வேண்டும். அதேபோல் இந்தச் சமூக ஊடகம் மூலம் ஆக்கத்தின் பெயரில் அழிவு அதிகம் உள்ளது.

சமூக ஊடகங்கள் வாயிலாக நிஜ உலகில் இருந்து தப்பிக்க முடியும். ஒரு பதின்வயதினர் மன அழுத்தத்தில், சோகமாக அல்லது மனச்சோர்வடைந்தால், சில மணிநேரங்கள் மட்டுமே இருந்தாலும், அவர்கள் தங்கள் பிரச்சினைகளை மறக்க சமூக ஊடகங்களை நாடலாம். சமூக ஊடகங்களில் உங்களை வெளிப்படுத்துவது மிகவும் எளிதானது, மேலும் நிஜ வாழ்க்கையில் வெட்கப்படக்கூடிய பதின்ம வயதினர் தைரியமாக ஆன்லைனில் இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் நிஜ வாழ்க்கையில் அவர்கள் அப்படி ஒன்றும் இல்லையென்றாலும், அவர்கள் தங்கள் வார்த்தைகளைப் பற்றி சிந்திக்கவும், நகைச்சுவையாக வரவும் முடியும். கூடுதலாக, ஒரு டீனேஜர் தனது குடும்பத்தினர் அல்லது நண்பர்களிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்டதாகவோ அல்லது துண்டிக்கப்பட்டதாகவோ உணர்ந்தால், அவர்கள் சமூக ஊடகங்களுக்குத் திரும்பலாம்.

நன்மை விட தீமை அதிகம் உள்ளது. அதிகமான இளைஞர்கள் . மாணவர்கள், மாணவிகள் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

நமது ஆரோக்கியத்துக்கும் இது கேடக உள்ளது. கண் , மூளை வளர்ச்சி போன்றவை பாதிக்கபடுகிறது. மன அழுத்தம் வருகின்றது, முகம் தெரியாத நட்பு அவர்கள் எப்படி பட்டவர்கள் என்று முழுவதம் அறியாமல் இருப்பது அவர்கள் தூய்மையானவர்களா என்று தெரியாமல் இருந்து ஏமாறுவது.

அதிகம் பயன்படுத்தினால அடிமை!

சமூக ஊடகத்தில் ஏதேனும் ஒரு பதிவையோ, காட்சியையோ வெளியிட்டு, அதற்கு பிறர் விருப்பம் (லைக்) தெரிவித்து பாராட்டினால், பின்னர் அதே பாராட்டுக்காகவும், லைக்குகளுக்காகவும் தொடர்ந்து பதிவிடும் பழக்கம், போதை ஏற்பட்டுவிடுகிறது. சமூக ஊடகத்துக்கு அடிமையாகும் நிலை ஏற்பட்டு விடுகிறது.

இது ஒரு பொதுவான இலகுவாக கூறக்கூடிய விடயம். சமூக ஊடகங்களுக்கு அடிமையாகும் போது கல்விக்கு ஒதுக்கப்படும்நேரம் இழக்கப்படுகின்றது. மேலும் கல்வியின் மீதுள்ள ஆர்வம் இழக்கப்படுகின்றது. உளவியல் சம்பந்தமான பிரச்சினைகளான மனச்சோர்வு போன்றவை கல்வி, நினைவாற்றல் சக்தி, கவனிக்கும் ஆற்றல் போன்றவற்றை சீர்குலைகின்றது. இது பிற்காலத்தில் எதிர்கால வாழ்க்கையையும் சீர்குலைக்கும்.

சமூக ஊடகங்களை தொடர்ந்தும் பயன்படுத்துவது ஒரு வகையான போதையை ஏற்படுத்தும். குறிப்பாக இளம் வயதுடையவர்கள் பாடசாலை விட்டு வீடுக்கு வந்ததில் இருந்து படுக்கைக்குச் செல்லும்வரை படிக்கும் போதும், டிவி பார்க்கும்போதும், உணவு உண்ணும் போதும், தொலைபேசிகளிலும், டெப்களிலும், மெசேஜ் செய்து கொண்டும், ஸ்டேட்டஸ் பார்க்கவும், சமூக ஊடகங்கள் வழியாக பகிரவும் செய்கின்றனர்.

ஆனால் கடந்த காலங்களில், இளைஞர்கள் வெளியே சென்று தங்கள் நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தார்கள். இப்போது அந்த நிலை முற்றிலும் மாறி, நண்பர்கள் பேசுவது, கோபப்படுவது எல்லாம் ஒன்லைனில் என்றாகிவிட்டது. எதிர்கால சமுதாயத்தை சமாளிக்க இளைஞர்களுக்கு தேவையான சமூக திறன்களை வளர்க்க இது ஒரு தடையாகும். ஒரு அந்நியருடன் நேருக்கு நேர் பேசுவது எப்படி, ஒரு உறவை எவ்வாறு உருவாக்குவது, பேசும்போது முகபாவனைகளை எவ்வாறு கட்டுப்படுத்துவது, உடல் மொழி மற்றும் இவ்வாறு பல விடயங்களை அறிந்துகொள்ள தெரியாமல் போகிறார்கள். சமூக ஊடகங்களில் ஒரு கிளிக் மூலம் பிடிக்காதவர்களை ப்லோக் செய்து விட்டு போகலாம். ஆனால் சமூகத்தில் நேருக்கு நேராக வரும் பிரச்சினைகளை கையாளும் போது இளைஞர்கள் தவறிழைக்கலாம்.

19 மே மாதம் 2017 BBC வெளியிட்ட அறிக்கையின் அடிப்படையில்,

“சமூக ஊடகங்கள் இளைஞர்களிடையே மனநல பிரச்சினையை தூண்டுவதாக இருக்கலாம்” என்று எச்சரிக்கின்றது. மேலும்,சமூக ஊடகங்களை நன்மைக்கான ஒரு கருவியாக பயன்படுத்த முடியும் என்று தெரிவித்துள்ள அதே சமயத்தில் அந்த அறிக்கை , உதாரணத்துக்கு, இன்ஸ்டாக்ராம், சுய வெளிப்பாடு மற்றும் சுய அடையாளம் ஆகிவற்றின் மீது சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறுகிறது.

வேறு எந்த வயதினரை காட்டிலும், இளைஞர்களில் சுமார் 90 வீதமான பேர் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகின்றனர் . இதன் காரணமாக, சமூக ஊடகங்கள் ஏற்படுத்தும் விளைவுகளால் பாதிக்கப்படும் ஆபத்தில் குறிப்பாக இளைஞர்கள் உள்ளனர். யூடியூப், இன்ஸ்டாகிராம், ஸ்னாப்சேட், பேஸ்புக் மற்றும் ட்டுவிட்டர் ஆகிய சமூகவலைத் தளங்கள் தங்களுடைய ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வில் ஏதாவது பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதா என்ற தலைப்பில் பல கேள்விகளை இணையக் கருத்து கணிப்பு ஒன்று BBC இனால் நடத்தப்பட்டது.

கருத்துகணிப்பில் பங்கேற்றவர்களிடம் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு பிரச்சினைகள் 14ஐ மையமாக வைத்து ஒவ்வொரு சமூக ஊடகங்களையும் வரிசைப்படுத்துமாறு கூறப்பட்டது. இந்த தரவரிசைகளின் அடிப்படையில், மனநலத்தில் மிகவும் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் சமூக ஊடகம், யூடியூப் என்றும் அதற்கு அடுத்தபடியில் ட்டுவிட்டர் மற்றும் பேஸ்புக் ஆகியவை இருந்தன என்று தெரியவந்துள்ளது.

தற்காலச் சமூகங்களின் சமூகக் கட்டமைப்பானது “E-society” என அழைக்கப்படுமளவு இணையத்துடனும், சமூக ஊடகங்களுடனும் பின்னிப் பிணைந்ததாக உள்ளது. ஏனெனில் இன்றைய நவீன தொழில்நுட்ப சூழலில் மக்கள் வாழ்க்கை நடைமுறைகள் அனைத்தும் சமூக ஊடகங்களை சார்ந்ததாகவே அமைந்துள்ளன. எனினும் இன்று சமூக ஊடகங்களின் பாவனையானது வளந்தவர்களால் மட்டுமன்றி சிறுவர்கள் என மதிக்கப்படும் 18 வயதுக்குக் குறைந்த பாடசாலை மாணவர்களால் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படுவது வருத்தத்துக்குரிய விடயமாகும். இவ்வாறான சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதால் மாணவர்கள் மத்தியில் கல்வியில் மந்தகதி, ஞாபக மறதி, தனிமைப்படுத்தப்படுதல், சமூக ஊடகங்களால் அதிகமாக உள்ளீர்க்கப்படுதல் போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன.

இளமைப் பருவம் என்பது மிகவும் துடிதுடிப்பான பருவம் நாம் எதை முயற்சி செய்தாலும் அதனை சாதிக்க வேண்டும் என்ற முயற்சியோடு நகரும் பருவம் எனவே இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள் என்ற நிலையில் இளைஞர்களின் பங்கானதே இன்றைய மிகவும் குறைவாக காணப்படுகின்றது. ஏனெனில் இன்றைய உலகில் உலாவி கொண்டிருக்கும் சமூக ஊடகங்கள் இவை உலகிற்கு கிடைத்த சாபமா? அல்லது வரமா? என்பது கேள்விக்குறியான

(13 ஆம் பக்ககம் பார்க்க)



# தற்காலிக, ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் ஊழியர்கள் சந்திப்பு

(எஸ். சினீஸ் கான்)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் சுமார் 9 வருடங்களுக்கு மேலாகத் தற்காலிக, ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் ஊழியர்கள் தங்களது பணியை நிரந்தரமாக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். இதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஞாயிற்றுக்கிழமை (04) திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக்கைச் சந்தித்து வேண்டுகோள் விடுத்தார்கள்.

இதன்போது இந்த விடயங்கள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடியதுடன் அவர்களின் கோரிக்கையை உரிய தரப்பினரின் கவனத்துக்குக் கொண்டு செல்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் வாக்குறுதியளித்தார்.

# இலட்சிய இளையோரை...

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வினாவாகும் இந்த ஊடகங்களை பயன்படுத்தும் நாம் அவ் ஊடகங்களின் ஊடாக வெளியிடப்படும் தகவல்களை எமது சாபமாக்கிக் கொள்வதும் எமக்கு வரமாக்கிக் கொள்வதும் அதனை பயன்படுத்தும் எமது கைகளிலேயே உள்ளது. நாம் சாதிப்பதற்கு வெற்றிப்படி கட்டுக்களாக அமையும் இச்சமூக ஊடகங்களானது எம்மை புதைகுழியில் தள்ளுவதற்கும் தயாராகவே உள்ளது. எனவே எவ்வாறான விடயங்களை நாம் பார்க்க வேண்டும் எவ்வாறான விடயங்களை கற்றுக் கொள்ள வேண்டும் என்ற பகுத்தறிவோடு ஊடகங்களை நுகர வேண்டும். இருப்பினும் இன்றைய உலகில் சமூக ஊடகங்களில் செயற்கை நுண்ணறிவு என்பது வெற்றிகரமாக கால்பதித்து விட்டது. இதை நன்மை என்று சொல்வதா?அல்லது தீமை என்று சொல்வதா?

நாம் சமூக ஊடகங்களை பயன்படுத்திக் கொண்டிருக்கும்போது எமது எண்ணங்களில் என்ன சிந்தனை தோன்றுகிறது என்பதை நாம் பார்வையிடும் காணொளிகள், பதிவுகள் மூலம் எமது சிந்தனைகளின் தகவல்களை தானாகவே உள்வாங்கிக் கொண்டு அதற்கு ஏற்ற வகையில் நாம் பார்க்கத் தூண்டும் நாம் அதிகமாக விருப்பங்களை தெரிவிக்கும் பதிவுகளை அடிக்கடி நம் கண்முன்னே பதிவுகளை கொண்டு வருகின்றது. இது இளைஞர்களின் ஆசையை தூண்டுவதற்கு காரணமாகிறது.

சமூக ஊடகத்துக்கு இளைஞர்கள் அடிமையாவதைத் தடுக்கவும், சமூக ஊடகத்தில் ஆக்கப்பூர்வமான பங்களிப்பை அவர்கள் செய்யவும் பெற்றோர் ஆக்கப்பூர்வமான அணுகுமுறைகளைக் கையாள வேண்டும். எனவே முரட்டு முட்களுக்கும் கரடு முரடான இலைத் தண்டுகளுக்கும் மத்தியில் மலரும் ரோஜா மலரில் வண்டு வந்து அமர்ந்து தேன் எடுப்பது போல மேற்க்கண்ட ஊடகங்களில் நல்லனவற்றை எடுத்து தீயனவற்றை மாணவர்கள் தவிர்த்து நடப்பர்களே ஆனால் அவர்களது எதிர்காலம் ஒளிமயமானதாக அமையும்.

இணையம் வாயிலாக கல்வி, வியாபாரம், சமையல், மருத்துவக் குறிப்புகள், ஆன்மிகம் என எத்தனையோ விஷயங்கள் குறித்து ஏராளமான வீடியோக்கள் வெளியாகி உள்ளன. இதன் மூலம் ஏராளமான மக்கள் பயன் பெற்று வருகின்றனர். ஆனால், அதேசமயம், மக்களின் குறிப்பாக, இன்றைய இளைஞர்களின் மன நிலையையும் ஒழுக்கத்தையும் சீர்குலைக்கும் வகையில் ஆபாசம் ஒன்றையே குறிக்கோளாக வைத்து, சமூக வலைத்தளங்களைத் தவறாகப் பயன்படுத்தும் இவர்களின் ஆபாச தளங்களை உடனடியாக முடக்கச் செய்து, ஆபாச வீடியோ வெளியிடும் நபர்கள் மீது காவல்துறை தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே மக்களின் விருப்பம். இவர்களின் சமூக ஊடகப் பக்கங்களையும் யூடியூப் சேனல்களையும் தடைசெய்வதால், பச்சிளம் குழந்தைகளுக்கும் பாலியல் தொந்தரவு போன்ற கலாசார சீரழிவுகளைத் தவிர்க்கலாம்.

இன்றைய இளைஞர்கள் எதையும் நின்று நிதானித்து யோசித்து, சரியான புரிதல்களோடும், தெளிவான சிந்தனைகளோடும் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். சிறிது நேர சிற்றின்பத்துக்காகத் தங்கள் எதிர்காலத்தை வீணாக்காமல், சுய கட்டுப்பாட்டோடு இருப்பது அவசியமான ஒன்றாகும். அமிர்தமும் விஷமும் அருகருகே இருக்கும் இவ்வுலகில், நற்சிந்தனை, ஒழுக்கம் எனும் நல்ல விதைகளை தங்களின் மனதில் நட்டால், நல்ல கனிகள் எனும் அமிர்தத்தை உண்ணலாம். ஒழுக்கமற்ற சிந்தனைகள் எனும் விஷ விதைகளைத் தூவி வைத்தால், விஷத்தையே நம் அடுத்த தலைமுறைக்கும் விட்டுச் செல்கிறோம் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். அமிர்தமா? விஷமா? எல்லாம் நம் கைகளில்தான் இருக்கிறது. ஆகவே, இன்றைய இளைஞர்கள் சமூக வலைத் தளங்களை கல்வி, வேலைவாய்ப்பு போன்ற நல்ல விஷயங்களுக்குப் பயன் படுத்தி, பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்கி, வாழ்வில் வெற்றிபெற வாழ்த்துகள்!

**சொக்கலிங்கம் லோஜினி,**
2 ஆம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.



# வாலிப கிண்ணம் உதைபந்தாட்டம்: துறையூர் ஐயனார் அணி வெற்றி!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இளவாலை வருத்தபடாத வாலிப சங்கம் தனது 10 ஆம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடாத்தும் அணிக்கு 09 பேர் உள்ளடக்கிய "வாலிப கிண்ணம்" உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் துறையூர் ஐயனார் விளை யாட்டுக் கழகம் 2:1 என்ற கோல் அடிப் படையில் வெற்றி பெற்றது.

இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் துறையூர் ஐயனார் அணியை மணற்காடு சென் அன்ரனீஸ் அணி எதிர்த்தாடியது.

ஆரம்பத்தில் இருந்து மிக விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் முதல் பாதியாட்டத்தில் அடுத்தடுத்து 02 கோல்களை ஐயனார் அணி போட பதிலுக்கு மணற்காடு சென். அன்ரனீஸ் அணி 01 கோலை போட ஆட்டம் சூடுபிடித்தது.

மீண்டும் கோல் போடும் சந்தர்ப்பங் கள் இருந்தும் இரு அணிகளும் கோல் எதுவும் போடாத நிலையில் 02:01 என்ற நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவுற்றது.

மிக விறுவிறுப்பாக இடம்பெற்ற இரண்டாவது பாதியாட்டத்தில் மணற்காடு சென். அன்ரனீஸ் அணியினர் கோல் போடுவதற்காக போராடிய போதும் துறையூர் ஐயனார் அணியின் பின்கள வீரர்களின் சிறப்பான தடுப்பாட்டத்தால் கோல் போடுவதற்காக கடும் முயற்சி மேற்கொண்டும் பலன் அளிக்காமல் போக முடிவில் துறையூர் ஐயனார் அணி 02:01 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

ஐயனார் அணிசார்பாக சுபிதன், சுபீஜன் தலா ஒவ்வொரு கோலையும் மணற்காடு அன்ரனீஸ் அணி சார்பாக றெஜிஸ்ரன் 01 கோலையும் போட்டார்.

போட்டியின் ஆட்ட நாயகனாக துறையூர் ஐயனார் அணியின் வீரர் சுபீஜன் தெரிவு செய்யப்பட்டார்.



# சாய்ந்தமருது மீனவர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வு

## அகில இலங்கை மீனவர் சம்மேளன பிரதிநிதிகள் களத்தில்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அகில இலங்கை பொது மீனவர் சம்மேளம் ஏற்பாடு செய்திருந்த சாய்ந் தமருது பழைய ஆஸ்பத்திரி துறையைச் சேர்ந்த மீனவர்களுடனான சந்திப் பொன்று கடந்த வெள்ளிக்கிழமை (01) இடம்பெற்றது.

அகில இலங்கை பொது மீனவர் சம்மேளன அம்பாறை மாவட்ட இணைப் பாளர் ஏ.ஆதம்பாவா தலைமையில் நடந்த மேற்படி நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச கரையோர மற்றும் ஆழ்கடல் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத் தும் அரசியல் தலைமைகள் மீனவ சமூகத்தை தேர்தல் காலங்களில் தமது வெற்றிக்கு பயன்படுத்தி இருக்கின் றார்களே தவிர மீனவர்கள் எதிர் நோக்கும் எந்தவொரு பிரச்சினைக ளுக்கும் தீர்வு வழங்க முன்வரவில்லை என்ற தமது ஆதங்கத்தை தெரிவித் தனர்.

இப்பிரதேசத்தில் ஏற்பட்டுவரும் தொடர்ச்சியான கடலரிப்பால் கரைவலை மீனவர்கள் தமது ஜீவனோபாயத்தை இழந்து வருவதைக் கேட்டறிந்து கொள்ள எந்தவொரு அரசியல்வாதிகளும் முன்வராமை கவலையளிப்பதாக இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த நிகழ்வில் அகில இலங்கை பொது மீனவர் சம்மேளனத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளர் ரவீந்திர குணவர்தன சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

# வைக்கோலை தீ மூட்டி எரிப்பதை தவிர்க்கவும்!

## அக்கரைப்பற்று கம நல தலைமை அதிகாரி கோரிக்கை




சிறுபோக நெல் அறுவடையின் போது வயல் நிலங்களில் பரவலாக செறிந்து காணப்படும் வைக்கோலைத் தீயிட்டு எரிப்பதை முற்றாக நிறுத்து மாறும் வைக்கோலைச் சேதனப் பசளையாக மாற்றும் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் அம்பாறை அக்கரைப்பற்று கிழக்கு கம நலசேவை நிலையத்தின் தலைமை அதிகாரி யூ.எல்.சம்சுடீன் விவசாயிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டின் உணவு உற்பத்தியில் நான்காம் இடத்திலுல்ள அம்பாறை மாவட்டத்தில் அதி கூடிய நெல் வேளாண்மை மேற்கொள்ளப்படு கின்றது.

இந்த மாவட்டத்தில் இரசாயன உரப்பாவனை படிப்படியாக குறைந்து இயற்கை சேதனப் பசளையின் பயன்பாட்டை அதிகரிக்க கமநல சேவை மத்திய நிலையத்தின் உடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தீயிட்டு எரிக்கும் போது நிலத்தில் உள்ள நன்மை உண்டாகும் உயிர் உள்ள சிறிய மண்புழுக்கள் உடன் பல உயிர் வாழும் உயிரினங்க ளும் அளிக்கப்பம்.

அது மட்டுமன்றி அண்மையில் இடம் பெற்ற நீர் குழாய் எரிவு போன்ற விபத்துக்களும் இடம்பெற வாய்ப்புகள் உள்ளன.

இதற்கு அமைவாக அக்கரைப்பற்று கிழக்கு கம நலசேவை நிலையத்தின் கீழ்வரும் சகல விவசாய காணிகளிலும் இம் முறை கூடுதலான அளவு சேதனப் பசளை பயன்பாட்டை அதிகரிக்க திட்டமிட்டுள்ளது.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக வயல் நிலங்களில் சிறுபோகத்தில் கிடைக்கப் பெற்ற வைக்கோல் மற்றும் நெற்பயிரின் அடிப்பகுதிகளை எரிப்பதனை தவிர்த்து மண்ணுடன் இரண்டறக்கலந்து உக்கவைப்பதன் மூலம் எதிர்வரும் பெரும் போகத்தில் கூடுதலான நெல் விளைச்சலுடன் கூடிய அறுவடையைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அக்கரைப்பற்று கிழக்கு கம நலசேவை நிலையத்தின் தலைமை அதிகாரி யூ.எல்.சம்சுடீன் மேலும் தெரிவித்துள்ளார்.

# சாய்ந்தமருதில் நீதிவான்கள் கௌரவிப்பு







**(நூருல் ஹுதா உமர், பௌசுல் றிபாஸ்)**

கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏட்பாட்டில் உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.திலீப் நவாஸ் மற்றும், ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கலாநிதி யூ.எல்.ஏ.மஜீத் ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வு சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் இடம்பெற்றது.

கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் எம்.ஐ.றைஈசுல் ஹாதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.றொக்ஷ், மாவட்ட , நீதிவான் நீதிமன்ற நீதிபதிகள், சிரேஷ்ட, கனிஷ்ட சட்டத்தரணிகள், பள்ளிவாசல் தலைவர்கள், அதிபர்கள், தென்கிழக்கு பல்கலைக் கழக உபவேந்தர் றமீஸ் அபூபக் கர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ.எம்.ஏ. திலீப் நவாஸ், ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கலாநிதி யூ.எல்.ஏ.மஜீத் ஆகியோருக்கு இலங்கை மோட்டார் போக்கு வரத்து திணைக்களத்தின் உதவி ஆணையாளர் ஏ.எல். எம்.பாறூக், கல்முனை வர்த்தக சங்கத் தலைவர் கே.எம். எம்.சித்தீக் ஆகியோர் பொன்னாடை போத்தி கௌரவித் தனர்.

# இலங்கையை பார்த்தபடி ஆஞ்சநேயர் சிலை: இராமேஸ்வரத்தில் அமைப்பதற்கு நடவடிக்கை!

தமிழகம் – இராமேஸ்வரம் பகுதியில் 100 கோடி இந்திய ரூபாய் செலவில் இலங்கையை பார்த்தபடி 108 அடியில் பிரமாண்ட ஆஞ்சநேயர் சிலையொன்று அமைக்கப்படவுள்ளது.

குறித்த சிலை இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் அடுத்த ஓலைக்குடா கிராமத்தில் அமையப்பெறவுள்ளது.

சிலை அமைப்பதற்கான அஸ்திவார பணிகள் நிறைவடைந்துள்ளதுடன் அடுத்தாண்டு சிலை திறக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

இராமேஸ்வரம் என்பது இராமாயண வரலாற்றுடன் தொடர்புடைய காசிக்கு நிகரான புண்ணிய பூமி. எனவே பாவங்கள் நீங்கி புண்ணிய கிடைக்கும் என பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் குறித்த பகுதிக்கு செல்கின்றனர்.

இந்த நிலையில், இன்னும் ஆறு மாதங்களுக்குள் ஆஞ்சநேயர் சிலை அமைக்கும் பணிகள் முழுமையாக முடிந்து, அடுத்தாண்டு இராமேஸ் வரத்தில் இருக்கும் மற்றொரு முக்கிய புண்ணிய தலமாகவும் சுற்றுலா தலமா கவும் அமைய உள்ளது என்பது குறிப்பிடத்



# தமிழகத்துக்கு காவிரி நீரை திறப்பதை கண்டித்து கர்நாடகாவில் போராட்டம்!



காவிரியிலிருந்து தமிழகத்துக்கு தண்ணீர் திறப்பதை கண்டித்து கர்நாட காவில் உள்ள மண்டியாவில் விவசாயிகள் போராட்டம் நடத்தியுள்ளனர்.

காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவுபடி தமிழகத்துக்கு காவிரியில் விநாடிக்கு 9 ஆயிரம் கனஅடி நீரை கர்நாடகா திறந்துவிட்டுள்ளது. இதனால் மண்டியாவில் 124.80 அடி உயரம் உள்ள கிருஷ்ணராஜசாகர் அணையின் நீர்மட்டம் 100 அடியாக குறைந்துள்ளது.

இதனால் கோபமடைந்துள்ள கர்நாடக மாநில விவசாயிகள் சங்கத்தினர் மண்டியாவில் உள்ள கே.ஆர்.சதுக்கத்தில் கர்நாடக அரசை கண்டித்து போராட்டம் நடத்தியுள்ளனர். இதன்போது அவர்கள் கர்நாடகா மற்றும் தமிழக அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பியுள்ளனர்.

இதனிடையே சிலர் பெங்களூர் மைசூரு தேசிய நெடுஞ்சாலையை மறிக்க முற்பட்டதால் பொலிஸார் அவர்களை கைது செய்துள்ளனர்.

இதேவேளை, கிருஷ்ணராஜசாகர் அணை அமைந்துள்ள ஸ்ரீரங்கப்பட்டணா அருகே கரும்பு விவசாயிகள் சங்கத்தினர் ஆற்றில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்தியுள் ளனர். இதனையடுத்து பொலிஸார் அவர்களை தடுத்து நிறுத்தியுள்ளனர்.

அத்துடன், தமிழகத்துக்கு திறக்கப்பட்ட நீரை நிறுத்தும்வரை தொடர் போராட்டம் நடத்துவோம் என கர்நாடக விவசாயிகள் சங்கத்தினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# உதயநிதிக்கு எதிராக பொலிஸில் புகார்!

சனாதன தர்மம் குறித்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் கருத்து சட்டவிரோதமானது என்றும் அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி உச்சநீதிமன்ற வழக்கறிஞர் ஒருவர் டில்லி பொலி ஸில் புகார் அளித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற தமிழக முற்போக்கு எழுத்தாளர் சங்கத் தின் சனாதன ஒழிப்பு மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய உதயநிதி ஸ்டாலின், 'சனாதன எதிர்ப்பு மாநாடு' என்று போடாமல் 'சனாதன ஒழிப்பு மாநாடு' என்று நீங்கள் போட்டிருக்கிறீர்கள். அதற்கு என்னுடைய வாழ்த்துகள். சனா தனம் என்பதை எதிர்ப்பதைவிட, ஒழிக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் உதயநிதி ஸ்டாலினின் இந்த கருத்து சட்டவிரோத மானது என்றும் அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி உச்சநீதிமன்ற வழக்கறிஞர் வீனீத் ஜிண்டால் டில்லி பொலிஸில் புகார் அளித்துள்ளார்.

அவர் தனது புகாரில், உதயநிதிக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஆதித்யா எல் -1 வெற்றிகரமாக செயல்படுகிறது!

சூரியனை ஆய்வு செய்ய அனுப்பப்பட்டுள்ள ஆதித்யா-எல்1 செயற்கைக்கோள் ஆரோக்கியமாக உள்ளது எனவும் வெற்றிகரமாக செயல்படுகிறது என்றும் இஸ்ரோ தெரிவித்துள்ளது.

சூரியனின் வெளிப்புறப் பகுதியை ஆராய்வதற்கான ஆதித்யா-எல்1 விண்கலம், ஆந்திர மாநிலம் சிறீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் ஏவுதளத்தில் இருந்து பிஎஸ்எல்வி-சி57 ரொக்கெட் மூலம் நேற்று முன்தினம் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது.

125 நாட்கள் பயணம் செய்து விண்கலன் இலக்கை அடையும். பூமியில் இருந்து சுமார் 15 லட்சம் கிலோமீற்றர் தொலைவில் உள்ள 'லொக்ராஞ்சியன் பாயிண்ட் ஒன்' எனும் பகுதியில் இந்த விண்கலம் நிலைநிறுத்தப்பட உள்ளது.

அங்கு இருந்தபடி சூரியனின் வெளிப்புறப் பகுதியின் வெப்பச் சூழல், கதிர்வீச்சு, காந்தப்புலம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்த ஆய்வுகளை 'ஆதித்யா' மேற்கொள்ள உள்ளது.

இந்த நிலையில், ஆதித்யா எல் – 1 விண்கலத்தின் நிலை குறித்து இஸ்ரோ செய்தி வெளியிட்டுள்ளது. அந்த செய்தியில், ஆதித்யா-எல்1 செயற்கைக்கோள் ஆரோக்கியமாக உள்ளது.

வெற்றிகரமாக செயல்படுகிறது. இதன் அடுத்த சூழற்சி நாளை மாலை 03:00 மணி அளவில் மேற் கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கனடாவில் திருமண நிகழ்வொன்றில் துப்பாக்கிச் சூடு: இருவர் உயிரிழப்பு

கனடாவின் ஒட்டாவாவில் திருமண நிகழ்வொன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் குறித்த துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் காயமடைந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

திருமண விழாவின் விருந்து நடந்த நேரத்தில், உள்ளே நுழைந்த நபர் ஒருவர் அங்கிருந்தவர்களை துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இந்த நிலையில் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்வதற்கான விசாரணைகளை ஒட்டாவா பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.



# உக்ரேன் பாதுகாப்பு அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்!



உக்ரைன் பாதுகாப்பு அமைச்சர் ஒலெக்சி ரெஸ்னிகோவ் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என அந்த நாட்டு ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் ரஷ்யா ஆக்கிரமிப்பு செயற்பாடு ஆரம்பிப்பதற்கு முன்னரே ஒலெக்சி ரெஸ்னிகோவ் அமைச்சரவையில் அங்கம் வகிக்கின்றார்.

இந்தநிலையில் பாதுகாப்பு அமைச்சில் 'புதிய அணுகுமுறைகளுக்கு" நேரம் வந்துள்ளது என உக்ரைன் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். நேற்றைய தினம் அந்த நாட்டு மக்களுக்கு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# நோபல் பரிசு விழாவில் பங்கேற்க ரஷ்யா, ஈரான், பெலாரசுக்கு தடை!

சுவீடனில் நடைபெற உள்ள நோபல் பரிசு வழங்கும் விழாவில் கலந்து கொள்ள ரஷ்யா, பெலாரஸ் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளின் தூதர்களை அழைக்கப் போவதில்லை என்று நோபல் அறக்கட்டளை அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு, உக்ரைன் மீதான படையெடுப்பு காரணமாக, ரஷ்யா மற்றும் அதன் நட்பு நாடான பெலாரஸ் தூதர்களை நோபல் அறக்கட்டளை புறக்கணித்திருந்தது.

இந்த நிலையில், கடந்த ஒகஸ்ட் 31 ஆம் திகதி வெளியிட்ட அறிவிப்பில் கடந்த ஆண்டு புறக்கணிக்கப்பட்ட நாடுகளின் தூதர்கள் இந்த ஆண்டு அழைக்கப்படுவார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உக்ரைன் மீதான ரஷ்யவின் படையெடுப்பு, ஈரான் அரசின் மனித உரிமை மீறல் மற்றும் பெலாரஸ் ஜனாதிபதியின் சட்டவிரோத ஆட்சி ஆகியவற்றை கண்டிக்கும் விதமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த அறிவிப்புக்கு பல்வேறு நாட்டு தலைவர்கள் சமூக வலைதளங்களில் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

# பிளாஸ்டிக் சத்திர சிகிச்சையால் நடிகை மரணம்!



பிளாஸ்டிக் சத்திர சிகிச்சையால் ஏற்பட்ட சிறுநீர் பாதிப்புக் காரணமாக ஆஜெண்டினாவைச் சேர்ந்த பிரபல நடிகையான சில்வினா லூனா உயிரிழந்துள்ளார்.

43 வயதான லூனா கடந்த 2011 ஆம் ஆண்டு பிளாஸ்டிக் சத்திர சிகிச்சையை மேற்கொண்டிருந்த நிலையில் அவருக்கு சிறுநீரக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் அவர் வாரத்திற்கு சுமார் மூன்று முறைகள் டயாலிசிஸ் சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார்.

இதனிடையே சில்வினாவின் உடல்நிலை தொடர்ந்து மோசமடைந்து வந்ததால், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உயிர்காக்கும் கருவிகள் மூலம் சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் கடந்த 31 ஆம் திகதி சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை. பிளாஸ்டிக் சத்திர சிகிச்சையால் ஏற்பட்ட பக்க விளைவுகள் காரணமாகவே அவருக்கு உடல்நல பாதிப்புகள் ஏற்பட்டதாக குற்றம் சாட்டப்பட்ட நிலையில், அவருக்கு அறுவை சிகிச்சை செய்த அனிபால் லாடாக்கி என்ற நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த சில வருடங்களாக பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை மேற்கொள்ளும் பிரபலங்கள் உயிரிழந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.